**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்திய வானிலைத் துறை**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(24.04.2024 முதல் 28.04.2024)**

**அறிக்கை எண் 033/2024** **தேதி.23.04.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 42°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 13°செ முதல் 15°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 18.04.24 முதல் 22.04.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 36°செ முதல் 37°C முதல் 39°C ஆகவும் இரவுநேரவெப்பநிலை 26°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 74 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 25 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 08-13 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (18.04.2024 முதல் 22.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 28.04.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18/04 | 19/04 | 20/04 | 21/04 | 22/04 | தேதி | நாள்-1 24/04 | நாள்-2 25/04 | நாள்-3 26/04 | நாள்-4 27/04 | நாள்-5 28/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.8 | 0.6 | மழை (மி.மீ) | 1 | 0 | 0 | 0 | 0 |
| 39 | 38 | 39 | 37 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 40 | 40 | 41 | 40 | 41 |
| 26 | 26 | 26 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 27 | 26 | 26 | 27 | 27 |
| 5 | 5 | 6 | 5 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 2 | 2 | 4 |
| 74 | 70 | 70 | 74 | 67 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 80 |
| 40 | 39 | 51 | 25 | 36 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 20 | 20 | 20 | 20 | 30 |
| 10 | 12 | 13 | 8 | 13 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 200 | 200 | 230 | 90 | 200 | காற்று வீசும் திசை | 250 | 340 | 270 | 250 | 240 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (24.04.2024 முதல் 28.04.2024)**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 24.04.2024 அன்று இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 40°செ முதல் 41°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 26°செ முதல் 27°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **24-04-2024** | 0.1 | 0.0 | 0.0 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.4 | 0.0 | 0.0 |
| **25-04-2024** | 0.3 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.2 | 0.0 | 0.0 |
| **26-04-2024** | 0.1 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **27-04-2024** | 0.2 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **28-04-2024** | 0.1 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 8 - 12 கி.மீ வேகமான காற்றுடன் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. மதியநேரங்களில் (12.00 – 3.00 மணிவரை) அதிக வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால் அச்சமயத்தில் வேலைபார்ப்பதோ அல்லது வெளியில் செல்வதையோ விவசாயிகள் தவிர்க்கவேண்டும். மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும். |
| கம்பு (அ) சோளம் | **விதைப்பு** | இறவையில் கம்பு (அ) சோளம் விதைக்க மிகச்சரியான தருணம். எனவே, மக்காசோளம் விதைக்க தீர்மானித்திருந்தால் தவிர்த்து கம்பு(அ) சோளம் விதைக்கலாம். |
| எள் | பால் பிடிக்கும் பருவம் | தற்போது நிலவும் அதிக பகல்நேர மற்றும் இரவு நேர வெப்பநிலை காரணமாக பிப்ரவரி மாதம் கோடையில் இறவை எள் பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சியின் தாக்கம் தென்படுகிறது. இதனை கண்காணித்து மாலை நேரங்களில் 5 சதம் மேலதையான் பூச்சி மருந்தை தூவி விடவும். |
| கரும்பு | வளர்பருவம் | சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் கரும்பின் நுனிக்குருத்துப்புழு வர வாய்ப்புள்ளது. ஏனவே விவசாயிகள் அடிக்கடி நீர் பாய்ச்சி வயலை ஈரமாக வைத்துக்கொள்வதுடன் பயிர் மூடாக்கும் செய்யலாம். |
| கால்நடைகள் | | உயர்ந்துவரும் வெப்பநிலை மற்றும் குறைந்து வரும் காற்றின் ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு வெப்பஅழுற்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும். கால்நடைக்குடில்களைச் சுற்றிலும் ஈரமான சாக்குகளை தொங்கவிடவும். மதியநேரங்களில் (12.00 – 3.00 மணிவரை) அதிக வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால் அச்சமயத்தினைத் தவிர்த்து கால்நடைகளை 4.00 மணிக்கு மேல் மேய்ச்சலுக்கு விடவும். |

**குறுஞ்செய்தி**

- மதியநேரங்களில் (12.00 – 3.00 மணிவரை) அதிக வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால் அச்சமயத்தில் வேலைபார்ப்பதோ அல்லது வெளியில் செல்வதையோ விவசாயிகள் தவிர்க்கவேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**